# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

நாட்டில் நாத்திகம் பரவவுதற்கு பக்தர்களின் ஏமாற்றம் ஒரு காரணம். இறைவன்பால் பக்திகொண்ட அன்பர்கள் தாம் பிரார்த்தித்த வரம் கிடைக்காமல் போவதாலும் வாழ்க்கையில் துன்பம் மிகுதியாலும் பாபகாரியங்கள் இவ்வளவு தூரம் நடையாடும் ஒரு பூமியை நல்ல குணம் உள்ள இறைவன் படைத்திருக்க முடியாது என்று குதர்க்கவாதம் பேசி இறைமறுப்பு கொள்கையில் இறங்கி விடுகிறார்கள். இதற்குச் சரியானதொரு பதில் அழகிய மணவாளப்பெருமாள் நாயானார் ஆச்சார்யஹ்ருதயத்தில் 14 வது சூர்ணிகையில் வழங்குகிறார். அது வருமாறு:

"வத்சலையான மாதா, பிள்ளை பேகணியாமல் மண் தின்னவிட்டுப் பிரத்யௌஷதம் இடுமாபோலே, எவ்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமான இவனும் ருசிக்கு ஈடாகப் பந்தமும் பந்தம் அறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே."

பகவத்கீதையிலே கண்ணன் நன்மை தீமை இரண்டுக்குமே நானே பொறுப்பு என்று சொன்ன சிருஷ்டி ரகசியத்தைதான் இங்கே நாயானார் இப்படி விளக்குகிறார். மேல்நாட்டு மதங்களில் கடவுளின் சித்தத்துக்கு விரோதமாக ஏதோ ஒரு சாத்தான் சக்தி கடவுளின் கட்டுப்பாட்டை மீறி செயல்படுவதால்தான் உலகில் தீமையும் பாவமும் நிலை பெறுகின்றன என்று கூறுகிறார்கள். அப்படிச் சொல்லும் போது கடவுளை ஆற்றல் குறைந்தவனாக அவர்கள் சித்தரிக்கிறார்கள். அதனால் சிந்தனா சக்தியுள்ள பக்தர்கள் தடுமாற்றம் அடைகிறார்கள். மேல்நாடுகளில் அந்த மதங்கள் ஜனத்தொகை அளவில் பரவி இருந்தாலும் நடைமுறை அளவில் தோல்வி அடைய இது ஒரு முக்ய காரணம்.

தீமையும் பாவமும் கடவுளின் சக்திக்கு அப்பாற்பட்டவையல்ல என்பது வைணவக் கொள்கை. பகவத்லீலையிலே ஜீவாத்மாக்கள் மாயையினால் மறைக்கப் பட்டு பாவங்கள் செய்வதும், பிறகு பகவத் கடாக்ஷத்தினால் மாயையிலிருந்து முக்தி அடைவதும்தான் படைத்தல் காத்தல் அழித்தல் என்ற இந்த இறை விளையாட்டு என்பது வைதிகக்கருத்து. இதை விளக்குவதற்கு நாயனார் அழகியதொரு உதாரணம் காட்டுகிறார். மண் தின்பதில் விருப்பம் உள்ள ஒரு குழந்தை தாய்

திரு ஜோசப் அவர்கள் ஆற்றியுள்ள நூற்றுக்கணக்கான
சொற்பொழிவுகளின் ஒலி நாடாக்கள் மற்றும் குறுந்தகடுகள்
(cassets & CDs) மேற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

தடுத்தும் மண்ணைத்தின்ன விரும்புகிறது. அந்தக்குழந்தைக்கு நல்லறிவு வர வேண்டும் என்ற கருணையினால் அதை மண் தின்னும்படி அனுமதித்து அதனால் வயிற்றுநோவு ஏற்படும்போது அதற்கு தக்க மருந்து கொடுத்து அதை குணப்படுத்தும் தாய்போல இறைவன் செயல்படுக்கிறான் என்பது கருத்து.

மாயையினால் ஞானம் மறைக்கபட்ட ஜீவாத்மா உலகியல் கவர்ச்சிகளுக்கு உள்ளாகிறது. தடுக்கப்பட்ட இன்பங்களைத் துய்க்க, துடியாய்த் துடிக்கிறது. ஆசார்யர்களும் சாத்திரங்களும் என்ன தான் அறிவுரை கூறினாலும் அது செவி சாய்ப்பதில்லை. சிசுவை மண் தின்ன அனுமதிக்கும் தாய்போலே பகவான் பாவங்களைச்செய்ய அனுமதிக்கிறார். அவற்றின் தீய விளைவுகளை ஜீவாத்மா சந்திக்கும்போது மனத்தின் குரலாய் உள்ளிருந்து சாத்திரங்களின் பெருமையை உணர்த்தி பாவங்களுக்காக வருந்த வைத்துத் திருத்துகிறார். இப்படித்தான் குடிகாரர்களும், கொலைகாரர்களும், கொள்ளையரும், காமுகரும் படிப்படியாக உத்தம வைணவ நிலையை அடைகின்றார்கள்.

இறைவன் யார் என்றும், அவன் குணம் எப்படிப்பட்டதென்றும், பாவ எண்ணங்கள் எப்படி வருகின்றனவென்றும், ஞானம் என்றால் என்ன என்றும், தெரிந்துக்கொள்ள உலகெங்கும் உள்ள மனித இனம் அநாதிகாலமாகத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது. அதன் விளைவாகத்தான் நாம் உலகில் நாடுதோறும் ஒவ்வொரு விதமான மதங்களைப்பற்றி கேள்விப்படுகிறோம். இந்த பிரச்சனையை சரியாகத் தீர்க்க முடியாத பௌத்தரும் சமணரும் கடவுளே இல்லை என்று கூறி நிரீசுவரவாதிகளாகி விட்டார்கள். ஓரளவு பதில் கண்ட இஸ்லாமியரும், கிறிஸ்துவரும் அரை குறை மார்க்கங்களைக்காட்டி ஆத்தி நாத்திகத்திக்கு வழிவகுத்தார்கள். எந்த மதமும் நூறு சதவிகிதம் பதில் காணமுடியவில்லை. அந்த வகையில் பார்த்தால் வைணவத்துக்கே முழு வெற்றி.

நினைவும் மறதியும் என்னால் ஏற்படுகின்றன என்றான் கண்ணன் கீதையில். அவனை மீறி பாவ சிந்தனையோ,. பவித்திர நினைவோ யாருக்கும் ஏற்பட்டுவிடமுடியாது. உள்ளங்கையில் ஓடும் எறும்பை உற்றுப் பார்க்கும் ஒரு மனிதனைப்போல் அவன் சகலரின் எண்ணங்களையும் செயல்கயையும் மேற்பார்வையிட்டுக் கொண்டு இருக்கிறான். இந்த இடத்தில் அந்தர்யாமி என்ற ஒரு தத்துவத்தை வைணவம் நம்முன் வைக்கிறது. பகவான் (1) ஸ்ரீவைகுண்ட வாஸியாக மோட்ச லோகத்தில் இருக்கிறான். (2) பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிறான். (3) ராம கிருஷ்ண அவதாரங்களாக பூமிக்கு வந்துபோகிறான் (4) கோயில்களில் அர்ச்சதாவதாரமாக வீற்றிருக்கிறான். (5) இவையெல்லாம் போக ஒவ்வொரு ஜீவாத்மாவின் உள்ளத்தில் நிலைபெற்று இருக்கிறான். "அங்குஷ்டமாத்ர: புருஷ:" என்கிறது வேதம்.

ஒவ்வொருவருக்குள்ளும் அந்தர்யாமியாக அவன் விரிந்து படர்ந்து இருக்கிறான். அது ஏன்? எனக்குள்ளே இருக்கும் அந்தர்யாமி எனக்காக மட்டுமே,

உங்களுக்குள்ளே இருக்கும் அந்தர்யாமி உங்களுக்காக மட்டுமே! அர்ச்சாவதாரத்தையோ ராமகிருஷ்ண அவதாரங்களையோ, எல்லாரும் சொந்தம் கொண்டாடுவதுபோல ஒருவனுடைய அந்தர்யாமியை மற்றவர்கள் சொந்தம் கொண்டாட முடியாது. அந்தந்த ஆத்மாவின் இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு–நன்மை செய்தால் ஊக்குவித்து, தீமைசெய்தால் அச்சம் கொடுத்து ஆத்மாவை வழிநடத்துகிறது அந்தர்யாமி. இவனுடைய குரலைத்தான் மனசாட்சியின் குரல் என்று எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். தூரத்தில் இருந்தே அனைத்தையும் நிர்வகிக்க முடியும் என்ற ஆற்றல் இறைவனுக்கு இருக்கும் போது ஒவ்வொரு ஆத்மாவுக்கும் தனித்தனியே ஒரு வியூகம் எடுப்பது அவனுடைய தாய்மையைத் தானே காட்டுகிறது. என்னே அவன் கருணை! ஏமாற்றமடைந்த பக்தர்களும், துன்பம் அனுபவிக்கும் துரத்ருஷ்டசாலிகளும் கடவுளை நிந்திக்கும் போதும் கடவுள் இல்லை என்று மறுக்கும் போதும் இதைச் சிந்திக்க வேண்டும். நம்மைச் சித்ரவதை செய்து பார்த்து மகிழ்வது பகவானுக்கு நோக்கமல்ல. தீமையை தீமை என்று சொன்னால் ஏற்றுக்கொள்ள பக்குவம் இல்லாத மனமுள்ள நமக்கு அந்த அனுபவங்களை அனுபவிக்கும் சுதந்திரங்களைக் கொடுத்து அவற்றின் தீமையை உணர்த்தி அனுபவரீதியாக நம்மை திருத்துவது தான் அவன் நோக்கம். 'நெருப்பை தொடாதே சுடும்' என்று ஒரு குழந்தையை நாம் அதட்டுகிறோம். அது பிடிவாதமாக தொட்டுவிடத்துடிக்கிறது. ஒருமுறை தொட்டு விட்டுக் கை வெந்துவிட்டால் அது தன் ஆயுளுக்கும் நெருப்பை தொடாதல்லாவா? இதுதான் இறைவனுடைய திட்டம். அதை என்ன அழகாகச் சொல்லுகிறார் நாயனார்!!